முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கூற்றுவ நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

03.12.2018, திங்கட்கிழமை

1. **கலிமீட்பின் ஞான குருவே**
**கலிமீட்பின் அவதாரமாக வந்து**
**அழியாமை அருளும் ஞான குருவே**
**ஆறுமுக அரங்கனே உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**தெரியவே மூவைீர் திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 17ம் நாள் 03.12.2018, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு கூற்றுவநாயனார் யானும்**
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான ஆளுமைக்கு வந்தவர்கள்
தானதரும சிந்தை பலமுடன்
தவராசன் அருளாசி துணை பெற்று
4. பெற்றுமே சேவை ஆற்றிட
பேருலகே நல்தலைமை பெருகி
ஆற்றல்பட ஞானமதின் ஆட்சி
ஆறுமுகன் தலைமை கொண்ட ஆட்சி
5. ஆட்சி உலகினில் உருவாகி
அகிலமே பாதுகாப்பு பெறும்
மாட்சிமைபட இந்த கலியுக
மாயை மாச்சர்யங்கள் எல்லாம் விலகி
6. விலகியே உலகம் பலம் பெறும்
வினை சேரா மக்களுக்கு நலமும்
கலகம் ஆபத்து என்பது இல்லா
கண்ணியமான வாழ்வும் வளமும் பெருகும்
7. பெருகவே அரங்கன் ஆற்றும்
பேருண்மைமிக்க ஞானவழியை
மாறுதலுக்காக மக்களிடை நடத்த
மக்களெல்லாம் சரணடைந்து வருக
8. வருகவே மக்களின் தேவைகள்
வல்லமைபட பூர்த்தி ஆகும்
ஆறுமுகன் அருளும் ஆசியும்
அனைவருக்கும் கிட்டி பலம் கூடும்
9. கூடவே சுத்த சைவ நெறியாம்
குமரன் ஞான யோக நெறி
நாடெங்கும் பரவ வளரவே
ஞானிகளின் வருகை பெருகியே
10. பெருகியே கலியுகம் தன்னில்
பேரிடர் பிரச்சனைகள் அணுகா
உருவாகும் அமைதியும் ஞானமும்
உயர்வான பாதுகாப்பும் பலமும்

11. பலமான பொருள் வளமும்
பண்பான சமூகமும் சமத்துவமும்
வளமான யுகமுமாக கலியுகம் மாறும்
வழங்கிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் கூற்றுவ நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

துன்பம்மிக்க கலியுகத்தின் இடர்களில் இருந்து மக்களை மீட்டு காக்கவே வந்திட்ட மகா ஞானகுருவே கலியுகத்தை ஞானயுகமாக ஆக்கிடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே அழிவிலாமை வரத்தை அருளி மரணத்தினின்று மக்களை மீட்கும் ஞானகுருவே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 17ம் நாள் 03.12.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கூற்றுவநாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கூற்றுவநாயனார்.

மக்களை காப்பாற்றும் தலைமை பொறுப்பான ஆட்சி பொறுப்பிற்கு வந்து மக்களை ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்களே நீங்கள் தானதரும சிந்தையுடன் நடந்து தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளாசிகளின் துணையினைப் பெற்று உலக மக்களுக்கு சேவை ஆற்றிட இவ்வுலகமெங்கும் நல்ல தலைமைகள் பெருகி உலகினில் ஆற்றல் மிகுந்த ஞானத்தினால் உண்டாகும் ஞான ஆட்சியானது முருகப்பெருமானின் தலைமையில் உலகினில் உருவாகிடும். ஞானத்தலைவன் முருகப்பெருமான் தலைமையில் இந்த உலகமே சிறப்பான அருள் பாதுகாப்பை அடைந்திடும். மேன்மைகள் பெருகி இந்த கலியுகமே மாயைகள் எல்லாம் விலகி வேறுபாடுகள் எல்லாம் விலகி இவ்வுலகம் சர்வபலத்தினை பெற்று சிறப்படையும்.

ஞானஆட்சியில் மக்களுக்கு மேல்வினைகள் பற்றாமல் வினைகள் சேராமல் மக்கள் எல்லா நலத்தினையும் அடைந்து கலகம் இல்லாத ஆபத்துகள் இல்லாத கண்ணியமான வாழ்வையும் வளங்களையும் அதிகமாக பெற்று சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வகுத்து நடத்துகின்ற பேருண்மை மிக்கதும் ஜென்மத்தைக் கடைத்தேற்ற வல்லதுமான தூயஞான நெறியை இவ்வுலகம் மாற்றம் அடைந்திட வேண்டியே மக்களிடம் எடுத்துக் கூறி மக்களெல்லாம் ஆறுமுக அரங்கனின் தூயநெறிக் கொள்கைகளை ஏற்று ஆறுமுக அரங்கமகா தேசிகனின் திருவடிகளிலே சரணடைந்து கடைத்தேறுவர்.

மக்களெல்லாம் அரங்கன் திருவடியே கதியென சரணடைந்துவிட்டால், சரணடைந்திட்ட மக்களின் தேவைகளெல்லாம் வல்லமையுடன் பூர்த்தியாகும். முருகப்பெருமானின் அருளும் ஆசியும் எல்லா மக்களுக்கும் கிடைத்து அருள்பலம் கூடி நிற்கும்.

உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொள்கின்ற அரங்கன் வகுத்த சுத்தசைவ நெறிக் கொள்கையை முருகப்பெருமான் வகுத்திட்ட ஞானயோக நெறியாகிய தூயநெறிக் கொள்கைகள் நாடெங்கும் பரவி மக்களெல்லாம் அதை ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்து நடந்திட நடந்திட நாட்டினில் ஜீவதயவு தர்மம் பெருகி ஞானிகளின் வருகை அதிகமாகும். ஞானிகளின் வருகை உலகினில் அதிகமாகி அருள்பலம் பெருகி இப்புவியில் இயற்கை பேரிடர்களால் பிரச்சனைகள் ஏதும் வராமல் அமைதியும் ஞானமும் உருவாகி உயர்வுமிக்க அருள்பாதுகாப்பும் அருள்பலமும் பெருகி, பலம்மிக்க பொருளாதார வளம் பெருகி பண்புமிக்க சமூகம் உருவாகி சமத்துவமும் சமஉரிமையும் சகோதரத்துவமும் உலகில் பெருகி துன்பம்மிக்க கலியுகமும் வளம்மிக்க யுகமாக, ஞானயுகமாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கூற்றுவநாயனார்.

–சுபம்–